FMS

# முதல் இடைப் பருவத்தேர்வு ஜூலை - 2019

SALEM

**10** - ஆம் வகுப்பு **தமிழ்**

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

**I எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.** 10 X 2 = 20

1. தமிழின் தனித்தன்மை யாது?
2. பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?
3. சொல்லிசை அளபெடை - விளக்குக.
4. வசன கவிதை - குறிப்பு வரைக.
5. விரிச்சி என்றால் என்ன?
6. வேற்றுமைத் தொகையைச் சான்றுடன் விவரி.
7. இறடிப் பொம்மல் பெறுகுவீர் - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
8. நற்றிணை நூலில் விருந்தோம்பல் பண்பு குறித்த கருத்து யாது?
9. காற்றைக் குறிக்கும் வேறுபெயர்கள் யாவை?
10. நிமிர்ந்த மா அல் போல உவமையை விளக்குக.
11. *பொருத்துக.*

| | | |
|---|---|---|
| அ) வாசனை | - | மயங்கச் செய்து |
| ஆ) ப்ராணரஸம் | - | நறுமணம் |
| இ) லயத்துடன் | - | உயிர் வளி |
| ஈ) மயலுறுத்து | - | சீராக |

12. *எவ்வகையானத் தொடர் கண்டறிக.*

அ) படித்து முடித்தான்

ஆ) ஒருமைப்பன்மை பிழை நீக்கி எழுதுக.

முற்காலத்தில் மிகுதியான விருந்தினர்களை வரவேற்று உணவளித்து மகிழ்ந்தார்.

**II எவையேனும் இரண்டனுக்கு விடையளி.** 2 X 4 = 8

13. காசிக் காண்டம் உணர்த்தும் விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கங்களைக் கூறுக.
14. பெருமழை எவ்வாறு பொழிந்தது?
15. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாக பாவலரேறு சுட்டுவன யாவை?

**III *அடிபிறழாமல் எழுதுக.*** 3 + 3 = 6

16. "அன்னை மொழியே" ......... எனத் தொடங்கும் பாடல் வரிகள்.
17. "சிறுதாம்பு" ...... எனத் தொடங்கும் பாடல் வரிகள்.



Scanned with

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 5 X 1 = 5

18. தமிழுக்குரிய அணிகலன் .............

அ) இரட்டைக் காப்பியம் 2) ஐம்பெரும் காப்பியம் 3) எட்டுத் தொகை

19. "பாடு இமிழ் பனிக் கடலை பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடிஉணர்த்தும் அறிவியல் செய்து யாது?

அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல் நீர் கொந்தளித்தல்

20. செய்தி 1 - ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15 ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.

செய்தி 2 - காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே

செய்தி 3 - காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்.

அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி

இ) செய்தி 3 மட்டும் சரி 4) செய்தி 1, 3 ஆகியன சரி

21. எழுவாயைத் தொடர்ந்து பயனிலை நின்று பொருள் தருவது ............. ஆகும்.

22. "சாகும் போதும் தமிழ் படித்து சாகவேண்டும், என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்" என்றவர் ............. .

V பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி. 4 X 1 = 4

23. முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்க்காக ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு

***வினாக்கள் :-***

1) இப்பாடல் இடம் பெறும் நூல் எது?

2) இப்பாடலின் ஆசிரியர் யார்?

3) துய்ப்பதால் இலக்கணக் குறிப்பு தருக.

4) முத்தமிழ் விரித்தெழுதுக, பிரித்தெழுதுக.

VI ஏதேனும் ஒன்றுக்கு விடையளி. 7 X 1 = 7

24. தாவரங்களில் தமிழ்ச் சொல்வளத்தைப் பற்றி கட்டுரை வடிவில் எழுதுக.

25. முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விரித்து எழுதுக.